# மோசேயும் பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணமும்

## ஐந்தாகமம் பகுதி 3 : உபாகமம், தேவப் பிரமாணம் அளிக்கப்பட்டது

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் P2b3 பாடத்தை வாசிக்கவும்.

**ஜெபம் :** "பழங்கால இஸ்ரவேலுக்கு நீர் தந்த பிரமாணங்களின் இன்றைய நோக்கத்தைப் புரிந்து கொள்ள உதவி செய்வீராக."

**1. தேவ வார்த்தையால் உங்கள் இருதயத்தையும் மனதையும் ஆயத்தப்படுத்துக**

பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தின் இருதயமும் அடிப்படையுமான தமது பத்து கட்டளைகளை பெற்றுக்கொள்ளுவதற்காக தேவன் தமது ஜனங்களை எவ்வாறு ஆயத்தப்படுத்தினார்.



பத்து கற்பனைகள் (சுருக்கப்பட்டது)

1. **என்னை அன்றி வேறு தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.**
2. **விக்கிரகங்களை வணங்காதே**
3. **தேவ நாமத்தை வீணில் வழங்காதே**
4. **ஏழாம் நாளில் ஓய்ந்திரு**
5. **தகப்பனையும் தாயையும் கனம்பண்ணு**
6. **கொலை செய்யாதே**
7. **விபசாரம் செய்யாதே**
8. **களவு செய்யாதே**
9. **பொய்சாட்சி கூறாதே**
10. **பிறர் பொருளை இச்சியாதே**

யாத்.20:1-17 ல் பத்து கட்டளைகளின் முழு பாடத்தையும் காண்க. இதுவே பழைய ஏற்பாடு. நியாயப்பிரமாணம் அல்லது உடன்படிக்கை என்றும் அழைக்கப்படும்.

**பத்து கட்டளைகளைப் பற்றிய வரலாற்று உண்மைகள்.**

- செங்கடலின் ஊடே ஒரு பாதையை உண்டாக்கி தமது ஜனத்தை அற்புதமாக எகிப்தின் அடிமைத் தனத்தில் இருந்து அழைத்து வந்த தேவன் பழங்கால இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுத்ததே பத்து கட்டளைகள். இந்த இரக்கத்தின் மகா அற்புதத்தின் காரணமாக அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். (உபா.20:2).
- அடிப்படையான பத்து கட்டளைகள் உட்பட இந்த பழமையான பிரமாணம் 612 சட்டங்களைக் கொண்டது. இன்று இவற்றில் பலவற்றை தேவ மக்கள் பின்பற்ற வேண்டும் என்று தேவன் விரும்பவில்லை. அவற்றில் சில: எருசலேமில் மட்டுமே தொழுது கொள்ளல், ஏழாவது நாளில் வேலை செய்தவர்களைக் கொலை செய்தல், 7ம் ஆண்டில் பயிர் செய்யாமல் இருப்பது, மிருகபலி படைப்பது. புதிய ஏற்பாட்டின் படி மிகச் சில பழைய ஏற்பாட்டு பிரமாணங்களே இன்று அவசியமாகும். இரண்டு ஏற்பாடுகளின் படியும், முக்கியமான பிரமாணம் அன்பின் பிரமாணமேயாகும் (உபாகமம்.6:4-5). சிறப்பான நாட்களை ஆசரிப்பவர்களையும், ஏற்றுக் கொள்ளப்பட்ட உணவையே புசிப்பவர்களையும் பவுல் அப்போஸ்தலர் கடிந்து கொள்ளுகிறார் (கலா.3:1-3; 9-11; கொலோ.2:16-17).
- தேவ மக்களை நியாயந் தீர்க்க மூப்பர்களை நியமிப்பது என்ற தனது மாமனாராகிய எத்திரோவின் ஆலோசனையை மோசே பின்பற்றினான் (யாத்.18:24-25). இந்த நியாயாதிபதிகளுக்கு தேவ பிரமாணத்தின் அறிவு தேவைப்பட்டது. (யாத்.19:7). ஒரு சமயம் அலைந்து திரிந்த இஸ்ரவேலர் சீனாய் மலை அடிவாரத்தில் முகாம் இட்டனர். தேவன் அவர்கள் மலையில் ஏறினால் சாவார்கள் என்று எச்சரித்தார் (யாத்.19:2-5). மோசே மட்டுமே மலையின் மேல் ஏற அனுமதிக்கப்பட்டான். தேவன் பெரும் இடி முழக்கங்கள், மின்னல், புகை மண்டலத்தின் மத்தியில் இறங்கினார். மலை பலமாக அசைந்தது (யாத்.19:16-20). அங்கே கற்பலகையில் எழுதப்பட்ட பத்து கட்டளைகளை தேவன் மோசேயிடம் கொடுத்தார் (யாத்.24:12).

- கிறிஸ்தவ விசுவாசிகள் கடைபிடிக்க வேண்டியவைகளாகப் பத்து கட்டளைகளில் எட்டு கட்டளைகளை புதிய ஏற்பாடு திரும்பக் கூறுகிறது. ஏழாவது நாளை ஓய்வு நாளாக பிரித்து வைக்க அது கிறிஸ்தவர்களை வலியுறுத்தவில்லை. சில ஆதி கிறிஸ்தவ சபைகள் வாரத்தின் முதலாம் நாள் கூடின (அப்.20:7). தேவன் ஓய்வு நாளை இன்னொரு நாளுக்கு மாற்றவில்லை. அதற்குப்பதிலாக, தமது மக்களுக்கு அவர் அளிக்கும் ஓய்வை வரையறுக்கும் உடன்படிக்கையை மாற்றினார் (எபி.4:3-12). சில சபைகள் ஓய்வு நாளில் முழு ஓய்வைக் கடைபிடிக்கின்றன.

- உலகத்தை சிருஷ்டித்து முடிந்தபின் **ஏழாம் நாளிலே** தேவன் ஓய்வு எடுத்தார். தற்காலிகமானதும், உலகப் பொருள் மேல் மையம் கொண்டதுமான பழைய உடன்படிக்கை, பல பழைய ஏற்பாட்டு விதிகளைப் போல, ஏழாம் நாளை ஓய்வு நாளாக ஆசரிக்கச் சொன்னது (யாத்.20:11).

- இயேசு மரித்தோரில் இருந்து எழுந்த வாரத்தின் **முதலாம் நாள்,** பழைய உடன்படிக்கைக்கு பதிலான, புதிய ஆவிக்குரிய சிருஷ்டிப்பின் புதிய உடன்படிக்கையை மையமாகக் கொண்டுள்ளது. பரிசுத்த ஆவியால் புதிதாகப் பிறக்கும் போது கிறிஸ்தவர்கள் புதிய நித்திய சிருஷ்டிப்பின் அங்கமாக மாறுகிறார்கள் (எரே.31:31-34; 2 கொரி.5:17).

- பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தை தேவன் புதிய ஏற்பாட்டு கிருபையின் உடன்படிக்கையைக் கொண்டு மாற்றினார். இந்தப் புதிய உடன்படிக்கையை இயேசு தமது இரத்தத்தினால் அறிமுகப்படுத்தியதால், விசுவாசிகள் பின்பற்ற வேண்டிய ஒரு புதிய வகையான பிரமாணத்தைப் புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகிறது. அது **சுதந்திரப் பிரமாணம்** என்றும் (யாக்.1:14), **விசுவாசத்தின் பிரமாணம்** என்றும் (ரோமர் 3:27-28), **அன்பின் பிரமாணம்** என்றும் (கலா.5:14), **ஆவியின் பிரமாணம்** என்றும் (ரோமர்.8:2-4). அழைக்கப்படும் 'மங்கிப்போன' பழைய பிரமாணமான 'மரணத்தின் ஊழியத்தை' அதிக மகிமையும் நித்தியமும் வாய்ந்ததுமான 'ஆவியன் ஊழியம்' மாற்றியமைத்தது (1 கொரி.3:7-11).

- பழைய ஏற்பாட்டு பிரமாணம் மரணத்தைக் கொண்டு வந்தது. ஏனெனில் அதனுடைய எல்லாக் கற்பனையையும் ஒருவராலும் காத்து நடக்க முடியாது. அதனுடைய நோக்கம் மூன்று விதமானது.
    1. அது பழைய இஸ்ரவேலின் பொது மற்றும் இராணுவ சட்டங்களை வரையறுத்தது. இதனால் அதன் மூப்பர்கள் ஞானத்துடன் நியாயம் தீர்க்க முடிந்தது.
    2. அது பாவத்தைப் பற்றிய அறிவைக் கொண்டு வந்தது (ரோமர்.3:19-20).
    3. அது 'போதனையாளர்' ஆகவும், வரும் நல்ல காரியங்களுக்கு 'நிழலாகவும்' விளங்கி, நமக்கு மரணத்தை அளித்த சாசனத்துக்கு நாம் பட்டிருந்த கடனை நீக்கி 'சிலுவையின் மேல் ஆணி அடித்த' இயேசுவை நோக்கிப் பாவிகளை வழிநடத்தியது (கலா.3:24-25; கொலோ.2:14-17).

தேவன் மோசேக்கு பத்து கட்டளையை அளித்தது பற்றிய இன்னொரு விளக்கத்தை **யாத்.32** ல் வாசிக்கவும். காண்க :

- தேவன் இஸ்ரவேலர் மேல் ஏன் சீற்றம் கொண்டார்?
- விக்கிரகத்தை வழிபட்டவர்களை அழிக்க இருந்த மனதை தேவன் ஏன் மாற்றினார்?
- தனது கோபத்தால் மோசே செய்த முட்டாள்தனமான காரியம் என்ன?

**2. ஏழுதப்பட்ட நியாயப்பிரமாண வார்த்தைகளால்1 அல்லாமல் பரிசுத்த ஆவியானவரால் வழிகாட்டப்படும்படி, வரும் வாரத்தில் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ள விசுவாசிகள் என்ன செய்ய வேண்டும் என்பதைத் திட்டமிடுக.**

- விசுவாசிகள் யாராவது பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தால் குழப்பம் அடைந்தால், அவர்களை சந்தித்து இந்தப் பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள உண்மைகளை விளக்கவும். கிறிஸ்தவ விசுவாசிகள் தற்போது புதிய கிருபையின் உடன்படிக்கையின் கீழ் வாழ்கின்றனர் என்பதை விளக்கவும். கிறிஸ்தவ வாழ்க்கையின் சிறுசிறு விவரங்களும் எழுதப்பட்ட சட்டங்களால் கட்டுப்படுத் - தப்படவில்லை. அன்பின் பிரமாணத்துக்கு நாம் கீழ்ப்படியும் போது பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களை விடுதலையின் பிரமாணம் மூலமாக நடத்துகிறார்.

- விசுவாசிகள், பழைய ஏற்பாட்டு விதிகளுக்கு தாங்கள் கட்டுப்பட்டுள்ளதாக நினைத்தால், அந்த சட்டத்தின் கட்டுக்களில் இருந்து அவர்கள் விடுதலை பெற ஜெபியுங்கள். ரோமர் 6:14 ஐ அவர்கள் மனப்பாடம் செய்ய உதவுங்கள்: "நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டு இராமல், கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது." விசுவாசிகள் இன்னும், இயேசுவின் அன்பின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் பழைய விதிகளையே பின்பற்ற விரும்பினால், அவர்களுக்கு கொலோ. 2:16-17 ஐ வாசித்துக் காட்டவும்.
- "ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையும் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாது இருப்பானாக. அவைகள் வரும் காரியங்களுக்கு நிழலாய் இருக்கிறது. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றியது."

### 3. வரும் ஆராதனை நடவடிக்கைகள் குறித்து உடன் ஊழியர்களோடு கலந்து திட்டமிடுதல்

தற்போதைய தேவைகளுக்கும், வட்டாரப் பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ற செயல்பாட்டைத் தெரிந்து கொள்க.

இஸ்ரவேலருக்கு தேவன் எவ்வாறு பத்து கட்டளைகளாக கொடுத்தார் என்பதையும், பாவம் செய்தவர்களுக்காக தேவனிடம் மோசே எவ்வாறு மன்றாடினான் என்பதையும் கூறுக.

பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தின் வரலாற்று உண்மைகளை விளக்குக (பகுதி 1 மேலே).

தாங்கள் தயாரித்த நாடகம், கவிதை, கேள்விகளை **குழந்தைகள்** வழங்கட்டும்.

பழைய நியாயப்பிரமாணத்தில் கிடந்து போராடும் மக்களை சந்திக்க உடன் வேலையாட்களுடன் நீங்கள் வகுத்தத் திட்டங்களை **விளக்குக.**

யோவான் 1:17 ஐ **மனனம் செய்க** (அனைவரும்) : "நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்து மூலமாய் உண்டாயின."

**கர்த்தரின் பந்தியை ஆசரிக்கும் முகமாக** கொலோ. 2:13-14 ஐ வாசிக்கவும். இயேசுவின் இரத்தம் மரண சாசனத்தின் சாபத்தில் இருந்து நம்மை விடுவித்தது. கர்த்தரின் பந்தி அவரது இரத்த தியாகத்தைப் போற்றுகிறது.

**ஜெபித்து,** இரண்டு மூன்றுபேர் அடங்கிய குழுவாக ஒருவருக்கொருவர் உதவி செய்யவும். பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணங்களை கடைபிடிக்க வேண்டும் என்று தேவன் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு விதிக்கவில்லை. ஆனாலும், பழைய பிரமாணங்களையும் விட்டு விடாமல் பலர் தவிக்கின்றனர். இவர்களுக்கு எப்படி உதவி செய்வது என்ற திட்டங்களை உறுதிப்படுத்தவும்.

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net